# சுபீட்சம்

நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே

செவ்வாய்க்கிழமை 14.02.2023 supeedsam.com supeedsam@gmail.com










# பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார்

## பழ.நெடுமாறன் பரபரப்பு தகவல்



தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் உயிருடன், நலமுடன் இருக்கின்றார் என்று உலக தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் தெரிவித்துள்ளார்.

தஞ்சாவூரில் இன்றைய தினம் இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் வைத்து அவர் இந்த விடயத்தைக் கூறியுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரன் நலமுடன், உயிருடன் உள்ளார். பிரபாகரன் நலமுடன் இருப்பது

02 ஆம் பக்கத்தில்...

# பிரபாகரன் உயிருடன் இல்லை!

## நெடுமாறன் கூற்றுக்கு இலங்கை இராணுவம் மறுப்பு



தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் உயிருடன் இல்லை என்றும், அவர் இறுதிப் போரில் கொல்லப்பட்டார் என்றும் இலங்கை இராணுவம் பி.பி.சியிடம் தெரிவித்துள்ளது.

தஞ்சாவூரில் அமைந்துள்ள முள்ளிவாய்க்கால் முற்றத்தில் இன்று பழ. நெடுமாறன், காசி ஆனந்தன் ஆகியோர் செய்தியாளர் சந்திப்பு ஒன்றை நடத்தினர். இந்தச் செய்தியாளர் சந்திப்பில், தமிழீழ விடுதலைப் புலிகள்

02 ஆம் பக்கத்தில்...

# பிரபாகரன் நலமுடன் இருந்தால்

## வைகோ வெளியிட்ட தகவல்!



பிரபாகரன் உயிருடன் உள்ளார் என்று பழ.நெடுமாறன் வெளியிட்ட செய்தியை போராளிகள் தம்மிடம் உறுதிப்படுத்தவில்லை என்றும், எனினும் பிரபாகரன் நலமுடன் இருந்தால் மகிழ்ச்சியே என மதிமுக பொதுச்செயலாளர் வைகோ தெரிவித்துள்ளார்.

02 ஆம் பக்கத்தில்...

# 1983 ஆண்டு தமிழர்களின் வீடுகளை எரித்தவர் ஒரு பேராசிரியரே



1983 ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளின் போது, ஜே. வி. பி க்காகத் தமிழர்களின் வீடுகளையும், கடைகளையும் எரித்த ஒரு பேராசிரியரே இன்று என்னை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்கிறார். அவர்கள் பல்கலைக் கழகத்தை வைத்து அரசியல் செய்யப் பார்க்கிறார்கள்.

02 ஆம் பக்கத்தில்...

# தேர்தலை நடத்தப் பணம் வழங்காவிட்டால் மக்களைத் திரட்டி வீதியில் இறங்குவோம்!



உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசு பணம் வழங்காவிட்டால் மக்களைத் திரட்டி வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்தப் போவதாக ஜே.வி.பியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில், எப்படியாவது இந்தத் தேர்தலை ஒத்திப்போட வேண்டும் என்பதில்

02 ஆம் பக்கத்தில்...






# ஈஸ்டர் தாக்குதல் குற்றவாளிகள் அனைவருக்கும் தண்டனை உறுதி!



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் ஈடுபட்ட அனைவரும் தண்டிக்கப்படுவார்கள் என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

வென்னப்புவையில் இடம்பெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் இந்த விடயத்தைக் குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில்,

02 ஆம் பக்கத்தில்...







# வெறுப்புப் பேச்சு மற்றும் வன்முறைத் தீவிரவாதம் தொடர்பாக மட்டக்களப்பில் அரச உத்தியோகத்தர்களுக்கு செயலமர்வு!!






(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

வெறுப்புப்பேச்சு மற்றும் வன்முறைத் தீவிரவாதம் தொடர்பான பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் செயலமர்வொன்று இன்று மட்டக்களப்பில் ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

மீள்குடியேற்ற மக்களின் சமூக ஒன்றினைவுக்கான உதவி திட்டத்தின் ஒரு அங்கமான வெறுப்புப்பேச்சு மற்றும் வன்முறைத் தீவிரவாதம் தொடர்பான பயிற்றுவிப்பாளர்களை பயிற்றுவிக்கும் இரண்டு நாள் செயலமர்வானது (13) திகதி மட்டக்களப்பிலுள்ள தனியார் விடுதியில் ஆரம்பித்துவைக்கப்பட்டது.

நோர்வே அரசாங்கத்தின் நிதி அனுசரனையுடன், ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் (க்மீ௩க), பிரெண்டீனா (ஆனுணு ஹுணஞீடிணச்) மற்றும் கிழக்கு மாகாணத்திலுள்ள மூன்று மாவட்ட செயலகங்களுடன் இணைந்து நடாத்தப்படும் குறித்த இரண்டு நாள் செயலமர்வானது ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தின் கிழக்கு மாகாணத்திற்கான திட்ட நிபுணர் கே.பார்த்தீபன் தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டம் நோர்வே அரசுடன் இணைந்து வடகிழக்கில் மீள்குடியேற்றப்பட்ட மக்களிற்கான செயற்திட்டத்தினை முன்னெடுத்துவரும் நிலையில் கிழக்கு மாகாணத்தில் உள்ள மட்டக்களப்பு, அம்பாரை மற்றும் திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் மீள்குடியேற்ற திட்டம் இடம்பெற்றுள்ள பிரதேச செயலக பிரிவுகளில் கடமையாற்றும் அரச நிறுவனங்களின் உயர் அதிகாரிகளை இச்செயலமர்விற்கு அழைத்து அவர்களை பயிற்றுவிப்பாளர்களாக மேம்படுத்தும் நோக்கிலேயே இச்செயலமர்வு இடம்பெறுகின்றது.

இதன்போது மனிதாபிமானம், ஊடகங்கள் மற்றும் சமூக ஊடகங்களின் தாக்கம், வெறுப்புப் பேச்சு, பேச்சு சுதந்திரம், வெறுப்புப் பேச்சின் விளைவுகள், வெறுப்புப் பேச்சினால் ஏற்படும் வன்முறை தீவிரவாதம் தொடர்பான பாதக தன்மைகள், ஊடகங்களின் கடமைகள், வெறுப்பு பேச்சும் வன்முறை தீவிரவாதத்தின் இயக்கிகளும், வெறுப்பு பேச்சை எவ்வாறு இனங்காணல், இலங்கையில் வெறுப்பு பேச்சு தொடர்பாக கையாளப்படும் சட்டங்கள், வெறுப்பு பேச்சை அடையாளம் காணும் விதம் மற்றும் வன்முறை தீவிரவாதத்தை ஏற்படுத்தும் காரணிகள் தொடர்பாக இதன்போது விரிவாக விளக்கமளிக்கப்பட்டது.

மூன்று மாவட்டங்களையும் சேர்ந்த அரச திணைக்களங்களின் 25 உயரதிகாரிகள் கலந்துகொண்ட இச்செயலமர்விற்கு வளவாளராக வன்முறையற்ற தொடர்பாடல் தொடர்பான அதிகாரம் பெற்ற பயிற்றுனரான ரமனுஷா பூபாலநாதன் கலந்துகொண்டு செயலமர்வினை நடாத்திவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மட்டக்களப்பில் தேரரை இலக்கு வைத்து துப்பாக்கி பிரயோகம்!

மட்டக்களப்பு ஸ்ரீ மங்களாராம விகாரை மற்றும் கெவிலியாமடு சுமனரதன ஆகிய விகாரைகளின் விகாராதிபதி அம்பிட்டிய சுமனரதன தேரரை இலக்கு வைத்து இனந்தெரியாத நபரொருவர் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

துப்பாக்கிச் சூட்டில் சுமனரதன தேரருக்கு எந்த பாதிப்பும் ஏற்படவில்லை எனவும், துப்பாக்கிச் சூடு இடம்பெற்ற வேளையில் அவர் அறைக்குள் இருந்ததாக தெரியவருகிறது.

இந்நிலையில், துப்பாக்கி பிரயோகத்தை மேற்கொண்ட நபர் அங்கிருந்து தப்பிச்சென்றுள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டனர்.

# வவுனியாவில் மனித எச்சங்கள் மீட்பு

வவுனியா ஈரற்பெரியகுளம் பகுதியில் இன்று இறந்த ஆண் ஒருவரின் உடல் எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

ஈரற்பெரியகுளம் புதிய நகர் பகுதியின் காட்டுப்பகுதியிலே இவ் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கடந்த ஒன்பது மாதங்களுக்கு முன் அதே பகுதியில் வசித்து வந்து காணமல் போன ஒருவரின் சடலம் என பொலிசார் தெரிவித்தனர்.

அதே பகுதியில் வசித்து வந்த 43 வயதுடைய இரண்டு பிள்ளைகளின் தந்தையான ஜிந்தக்க ராஜபக்ஷ என்பர் கடந்த 9 மாதங்களுக்கு முன் காணமால் போயுள்ளார். இந்நிலையில் இவ் மனித எச்சங்கள் கிடைக்கப்பெற்றுள்ள நிலையில் இது காணமால் போனவரின் உடல் அங்கங்களாக இருக்கலாம் என பொலிசார் சந்தேகிக்கின்றனர்.




இது தொடர்பான விசாரணைகளை வவுனியா ஈரற்பெரியகுளம் பொலிசார் மேற்கொண்டு வருகின்றனர்.

## ஈஸ்டர் தாக்குதல் குற்றவாளிகள் அனைவருக்கும்..

உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலில் உயிரிழந்தவர்கள், குடும்ப உறுப்பினர்களை இழந்தவர்கள் மற்றும் பாரிய அழிவுக்கு உள்ளான மக்களுக்கு நீதி வழங்கப்படும் என முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய தெரிவித்தார். எனினும், அந்த வாக்குறுதி அவரால் நிறைவேற்றப்படவில்லை.

கட்டடங்கள் கட்டப்பட்டாலும், ஒப்பிட முடியாத மதிப்புள்ள மனித வாழ்க்கையை மீட்டெடுக்க முடியாது.

தாக்குதலின் பின்னர் ஆட்சிக்கு வந்த ஒவ்வொரு தலைவர்களும் நீதி வழங்கப்படுவதாகப் பொய்களைக் கூறி மக்களை ஏமாற்றினர்.

பயங்கரவாதத் தாக்குதலொன்றில் தந்தையை இழந்த ஓர் மகன் என்ற வகையில், பயங்கரவாதத் தாக்குதலின் கொடூரத்தையும் நன்கு அறிந்திருப்பதால், உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் குறித்து வெளிப்படத்தன்மையுடன் கூடிய தேசிய மற்றும் சர்வதேச அளவில் விரிவான விசாரணை நடத்தப்பட்டு சம்பந்தப்பட்டவர்கள் நீதியின் முன் நிறுத்தப்படுவார்கள்.

அதுமட்டுமின்றி, இதுபோன்ற சம்பவங்கள் மீண்டும் நடக்காத வகையில் சட்டம், ஒழுங்கைப் பலப்படுத்த வேண்டும்

பயங்கரவாதத்தைச் செயற்படுத்தி அப்பாவி உயிர்களை அழிக்கும் நபர்களுக்கு மரண தண்டனை வழங்கப்பட வேண்டும் – என்றார்.

## தேர்தலை நடத்தப் பணம் வழுங்காவிட்டால் ...

இந்த அரசு குறியாகவே இருக்கின்றது. அதற்காக இதுவரை பல காரணங்களைக் கூறி வந்தது. இறுதியாக பணம் இல்லை என்று கூறி வருகின்றது.

தேவையற்ற விடயங்களுக்கு அதிக பணத்தைச் செலவு செய்கின்றது அரசு. வீண் விரயம் செய்கின்றது. அமைச்சர்களின் எண்ணிக்கையை அதிகரித்து பணத்தை வாரி இறைக்கின்றது.

ஆனால், மக்களின் ஜனநாயக உரிமையான தேர்தலை நடத்துவதற்கு மட்டும் பணம் இல்லையாம். அது பொய். தேர்தலை ஒத்திப் போடுவதற்காக அரசு இறுதியாகக் கையில் எடுத்திருக்கும் ஆயுதம் அது.

தேர்தலை நடத்துவதற்கு அரசு பணம் வழங்காவிட்டால் மக்களை திரட்டி வீதியில் இறங்கிப் போராட்டம் நடத்துவோம். பணத்தை வழங்கும்வரை விடமாட்டோம் – என்றார்.

## பிரபாகரன் நலமுடன் இருந்தால்

ஈழ விடுதலைப் போர்க்களத்தில் பிரபாகரனோடு களத்தில் நின்ற போராளிகள் சிலர் இன்னமும் உலகின் பல நாடுகளில் இருக்கின்றனர்.

என்னிடம் தொடர்பில் இருக்கும் அத்தகைய போராளிகள் பழ.நெடுமாறன் வெளியிட்டுள்ள செய்தியை உறுதிப்படுத்தவில்லை என்றார் வைகோ.

தமிழீழ தேசியத் தலைவர் பிரபாகரன் நலமுடன் இருக்கிறார் என்று பழ.நெடுமாறன் தனக்கு வந்தத் தகவலை உலகத் தமிழர்களுக்கு இன்று தஞ்சை முள்ளிவாய்க்கால் முற்றத்திலிருந்து அறிவிப்பாக வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## பிரபாகரன் உயிருடன் இல்லை!

இயக்கத்தின் தலைவர் பிரபாகரன், அவருடைய மனைவி, மகள் ஆகியோர் நலமுடன் இருக்கின்றார்கள் எனவும், அவர்கள் உரிய நேரத்தில் வெளிப்படுவார்கள் எனவும் பழ. நெடுமாறன் தெரிவித்திருந்தார்.

ஆனால், பிரபாகரன் உயிருடன் இருப்பது குறித்த செய்திகளை இலங்கை இராணுவம் முற்றிலுமாக மறுத்துள்ளது.

பிரபாகரன் நலமுடன் இருப்பதாகக் கூறப்படுவது குறித்து இலங்கை இராணுவத்தின் ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் ரவி ஹேரத்திடம் பி.பி.சி. கேட்டபோது, தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் இறுதிக்கட்ட யுத்தத்தில் கொல்லப்பட்டுவிட்டதற்கான ஆதாரங்கள் எம் வசம் உள்ளன – என்று தெரிவித்தார்.

அவர் மேலும், கூறுகையில்,

2009ஆம் ஆண்டு மே மாதம் 18 ஆம் திகதி நடந்த இறுதிக்கட்டப் போரில் பிரபாகரன் கொல்லப்பட்டார். டி.என்.ஏ. ஆதாரங்களையும் நாம் எடுத்துள்ளோம். குறித்த திகதியில் பிரபாகரன் கொல்லப்பட்டமைக்கான டி.என்.ஏ. பரிசோதனை உள்ளிட்ட அனைத்து ஆதாரங்களையும் எடுத்துள்ளோம். தவறான தகவல்களை அவர்கள் வெளியிடுகின்றார்கள்.

இந்தக் கூற்று எங்களுக்கு எந்தவித எச்சரிக்கை உணர்வையும் ஏற்படுத்தவில்லை. ஏனெனில் எங்களுக்குப் பிரபாகரன் கொல்லப்பட்டுவிட்டார் என்பது தெளிவாகத் தெரியும், அதில் சந்தேகமே இல்லை – என்று பிரிகேடியர் ரவி ஹேரத் பி.பி.சி. தமிழிடம் தெரிவித்தார்.

## 1983 ஆண்டு தமிழர்களின் வீடுகளை எரித்தவர் ஒரு பேராசிரியரே

வீடற்ற தமிழ்க் குடும்பம் ஒன்றுக்கு வீட்டைக் கட்டிக் கொடுத்து விட்டு அரசியல் செய்யட்டும் என்று ருகுண பல்கலைக்கழகத் துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் சுஜீவ அமரசேன தெரிவித்துள்ளார்.

ருகுண பல்கலைக்கழகத் துணைவேந்தரை ஏழு நாட்களுக்குள் பதவி நீக்க வேண்டும் எனக் கோரி நாடெங்கிலும் உள்ள பல்கலைக் கழக விரிவுரையாளர்கள் அடையாள பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர். இது தொடர்பில் பகிரங்க அறிக்கை மூலம் தெளிவுபடுத்தி அவர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பிலேயே சிரேஷ்ட பேராசிரியர் சுஜீவ அமரசேன இவ்வாறு தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனச் செயலாளர் றொகான் லக்சிறிக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்த ருகுண பல்கலைக் கழகத் துணைவேந்தர் சிரேஷ்ட பேராசிரியர் சுஜீவ அமரசேனவை உடனடியாகப் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என்பதை வலியுறுத்தி எதிர்வரும் 15 ஆம் திகதி நாடெங்கிலும் உள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் அடையாள பணிப் புறக்கணிப்பில் ஈடுபடவுள்ளனர். அதேநேரம் ருகுண பல்கலைக் கழக வெலமடம வளாகத்துக்கு முன்னால் ஆர்ப்பாட்டம் ஒன்றை நடாத்துவதற்கும் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனம் அழைப்பு விடுத்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில், கடந்த 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிரதமர் தினேஸ் குணவர்தன தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனத்தின் பிரதிநிதிகளால் பிரதமரின் கவனத்துக்குக் கொண்டு வரப்பட்டுள்ளதுடன், ஏழு நாட்களுக்குள் துணைவேந்தரைப் பதவி நீக்கம் செய்ய வேண்டும் என ஜனாதிபதிக்கு நிபந்தனைக் கடிதமொன்றை அனுப்புவதெனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனச் செயலாளர் றொகான் லக்சிறி கடந்த 5 ஆம் திகதி தனது அலுவலகத்துக்குச் சென்ற சமயம், அவரது அறையிலிருந்து வழக்கத்துக்கு மாறான மணம் வந்ததாகவும், அது அவரைக் கொலை செய்யும் வகையில் பரவ விடப்பட்ட நச்சு வாயுக் கசிவு என்றும் துணைவேந்தருக்கு எதிரான குற்றச்சாட்டில் தெரிவிக்கப்படுகிறது. எனினும் இவையனைத்தும் தன்னைப் பதவி நீக்கம் செய்வதற்காக வேண்டுமென்றே சோடிக்கப்பட்டவை என்று குறிப்பிட்டுள்ள துணைவேந்தர், தனக்கெதிரான சதியில் முன்னிற்போருக்கு எதிராகப் பல குற்றச் சாட்டுகளையும் முன்வைத்துள்ளார்.

இதேநேரம், பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் சம்மேளனச் செயலாளர் றொகான் லக்சிறியின் ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைத் தான் மறுப்பதாகத் தெரிவித்துள்ள துணைவேந்தர், மேலும் குறிப்பிடுகையில் றொகான் லக்சிறி, பேராசிரியர் நிரமல் ரஞ்சித் தேவசிறி மற்றும் பேராசிரியர் உப்புல் அபேரத்ன ஆகியோர் அரசியல் காரணங்களுக்காகவே என்னைப் பதவியில் இருந்து நீக்குவதற்கு பாடுபடுகிறார்கள்.

நான் இந்தப் பல்கலைக்கழகத்துக்கு இரண்டாவது தடவையாகத் திறமை அடிப்படையில் கூடிய புள்ளிகளைப் பெற்றுத் துணைவேந்தராகத் தெரிவு செய்யப்பட்டவன். அரசியல் செல்வாக்கினால் பதவியைப் பெற்றவன் நானல்ல. இங்கு கலாநிதிப் பட்டத்துக்காக நிதியைப் பெற்று விட்டு 13 வருடங்களுக்கு மேல் பணத்தை மீளளிக்காமல் இருப்பவர்களும், ஆராய்ச்சி ஒதுக்கீடுகள் மற்றும் பபீட்சைகளில் மோசடி செய்வோருமே எனக்கு எதிராக என்னைப் பதவி நீக்கம் செய்யத் துடிக்கிறார்கள். 1983 ஆம் ஆண்டு தமிழர்களுக்கு எதிரான வன்முறைகளின் போது, ஜே. வி. பி க்காகத் தமிழர்களின் வீடுகளையும், கடைகளையும் எரித்த ஒரு பேராசிரியரே இன்று என்னை வீட்டுக்கு அனுப்ப வேண்டும் என்கிறார். அவர்கள் பல்கலைக் கழகத்தை வைத்து அரசியல் செய்யப் பார்க்கிறார்கள். வீடற்ற தமிழ்க் குடும்பம் ஒன்றுக்கு வீட்டைக் கட்டிக் கொடுத்து விட்டு அரசியல் செய்யட்டும் என்று பகிரங்க அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

## பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார்

ஈழத்தமிழர்களுக்கு நம்பிக்கையை ஏற்படுத்தும்.

பிரபாகரன் குறித்து தவறான தகவல் பரப்பப்பட்டு விட்டது. அவருடன் நாம் தொடர்பில் தான் உள்ளோம்.

பிரபாகரனின் அனுமதியின் பேரிலேயே இந்தச் செய்தியாளர்கள் சந்திப்பு நடைபெறுகின்றது. பிரபாகரனின் மனைவி, மகளும் நலமுடன் உள்ளனர்.

உரிய நேரத்தில் மக்கள் முன் வருவார். பிரபாகரன் எங்கு உள்ளார் என்பது தற்போது அறிவிக்க இயலாது. தமிழக அரசும், மக்களும் பிரபாகரனுக்கு உறுதுணையாக இருக்க வேண்டும்.

இலங்கையில் ராஜபக்சக்களின் ஆட்சி முடிவுக்கு வந்திருப்பதால் இந்த அறிவிப்பை வெளியிடுகின்றோம் – என்றார்.

இலங்கையில் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும், இராணுவத்துக்கும் இடையே இடம்பெற்ற யுத்தம் கடந்த 2009 ஆம் ஆண்டு முடிவுக்குக் கொண்டு வரப்பட்டது. இந்தச் சந்தர்ப்பத்தில் இறுதி யுத்தத்தின் போது பிரபாகரன் உயிரிழந்துவிட்டார் என்று இலங்கை அரசால் அறிவிக்கப்பட்டிருந்தது.

இதனைத் தொடர்ந்து பிரபாகரன் குறித்து மாறுபட்ட பல தகவல்கள் தொடர்ந்து வந்து கொண்டிருக்கின்றன. பிரபாகரன் இறந்தது உண்மை என ஒரு தரப்பும் இல்லை, பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார் என மற்றொரு தரப்பும் கூறி வந்தன.

இந்நிலையில் தஞ்சாவூரில் உலகத் தமிழர் பேரமைப்பின் தலைவர் பழ.நெடுமாறன் இன்று செய்தியாளர்களைச் சந்தித்த போது பிரபாகரன் உயிருடன் இருக்கின்றார் என்று அறிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# 13 வயதில் கையை வேட்டி தந்தை செல்வாவுக்கு இரத்தத் திலகமிட்டவர்கள் நாங்கள்

## தேவையேற்படின் விளக்குடன் சேர்ந்து ஆட்சி அமைப்போம் என்கிறார் தமிழரசுக் கட்சி வேட்பாளர் தட்சிணாமூர்த்தி!

**( வி.ரி .சகாதேவராஜா)**

‘‘ஈழத்து காந்தி ‘‘என அழைக்கப்படுகின்ற தந்தை செல்வா காரைதீவிற்கு வந்த போது எனக்கு வயது 13. அன்று நானுட்பட பல இளைஞர்கள் கையை பிளேட்டால் வெட்டி அவருக்கு இரத்த திலகமிட்டவர்கள். அன்றிலிருந்து இன்று வரை நான் தமிழரசுக் கட்சியிலேயே தடம் புரளாமல் இருந்து வருகிறேன்.

இவ்வாறு, காரைதீவு பிரதேச சபைக்காக இலங்கை தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிடும் வேட்பாளரும் முன்னாள் தவிசாளருமான கணபதிப்பிள்ளை தட்சணாமூர்த்தி தெரிவித்தார்.

அவர் காரைதீவில் உள்ள அம்பாறை ஊடக மையத்தில் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மேற்படி கருத்தை தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் கூறுகையில் ..

பொதுச் சேவையில் சிறுவயதில் இருந்தே என்னை இணைத்துக் கொண்டவன் நான். இம்முறை மூன்றாம் வட்டாரத்தில் போட்டியிடுகிறேன். கடந்த மூன்று தடவைகளில் இலங்கை தமிழரசுக்கட்சி காரைதீவில் ஆட்சி செய்து வந்தது.இம் முறையும் 4 வட்டாரங்களிலும் வெற்றி பெற்று ஆட்சி அமைக்கும்




என்பதில் வேறுபட்ட கருத்துக்களில்லை.

அண்மையில் பசீல் ராஜபக்சே சொன்னார் நாம் வடக்கு கிழக்கில் படகிலும் வீணையிலும் வருகிறோம் என்று. இவர்கள் எதில் வந்தாலும் வடக்குகிழக்கு மக்கள் அவர்களை நிச்சயம் நிராகரிப்பார்கள்.

எமக்கு சவாலாக எந்த கட்சியும் இல்லை. அதற்காக ஏனைய கட்சிகளை தரக்குறைவாக கூறப்போவதும் இல்லை .எமது வெற்றி நிச்சயம் .

196 பேரை நிறுத்தலாம். சதி செய்யலாம்.இலவசங்கள் வழங்கலாம். போலிகள் வரலாம். போகலாம்.

ஆனால் காரைதீவுமக்கள் தெளிவானவர்கள். படித்தவர்கள்.அவர்கள் ஏமாற மாட்டார்கள் தமிழ் தேசியத்தில் மதிப்பும் மரியாதையும் உள்ளவர்கள். அதற்கு கௌரவம் அளித்து மதிப்புடன் வாக்களிப்பவர்கள். எனவே வெற்றி நிச்சயம்.

‘‘ ஆட்சியமைக்க மேலும் ஆசனம் தேவைப்பட்டால் எந்த கட்சியுடன் இணைவீர்கள்?‘‘ என ஊடகவியலாளர் ஒருவர் கேட்டபோது அவர் பின்வருமாறு பதிலளித்தார்.

எமது தலைவர் மாவை சேனாதிராஜா அண்மையில் கூறும் பொழுது நாம் தேர்தலுக்காக மட்டுமே பிரிந்து நிற்கின்றோம். பின்னர் இணைந்து ஆட்சி அமைப்போம் என்று. இது அண்ணன் தம்பி பிரச்சனை .இது சாதாரணமான பிரச்சனை. இது நிரந்தர பிரிவல்ல. அவர்கள் கடந்த இருபது ஆண்டுகளாக ஒன்றாக இருந்தவர்கள்.சகல விசயத்திலும் பங்கெடுத்தவர்கள். எனவே சந்தர்ப்பம் வரும்போது நாங்கள் குத்துவிளக்குடன் இணைந்தேதான் ஆட்சி அமைப்போம் .இது தலைமைப்பீடத்தின் முடிவு. எனது முடிவும் அதுதான்.

# காதலர் தினத்தன்று கல்முனையில் டியூட்டரிகளுக்குப் பூட்டு

**(எம்.எம்.அஸ்லம்)**

14ஆம் திகதி செவ்வாயன்று கல்முனை மாநகரசபை எல்லையினுள் இயங்கி வருகின்ற அனைத்து தனியார் கல்வி நிலையங்களையும் மூடி, வகுப்புகள் நடத்துவதை தவிர்க்குமாறு மாநகர முதல்வர் சிரேஷ்ட சட்டத்தரணி ஏ.எம்.றகீப் பணிப்புரை விடுத்துள்ளார்.

அன்றைய நாள் காதலர் தினமாக அடையாளப்படுத்தப்படுவதால், மாணவிகள் மீது பகிடிவதைகள் மற்றும் வேண்டத்தகாத ஒழுங்கீன சம்பவங்கள் இடம்பெறுவதை சுட்டிக்காட்டி பெற்றோர்கள் மற்றும் நலன் விரும்பிகள் விடுக்கும் வேண்டுகோள்களை கவனத்தில் கொண்டே இவ்வறிவுறுத்தல் விடுக்கப்படுவதாக அவர் மேலும் தெரிவித்தார்.

ஆகையினால் நாளை எந்தவொரு டியூட்டரியையும் திறக்காமல் ஒத்துழைப்பு வழங்குமாறு அன்பாய் வேண்டுகின்றோம்.

இதனை கண்காணித்து, உறுதி செய்யுமாறு மாநகர சபையின் வருமானப் பரிசோதகர்கள் உட்பட சம்மந்தப்பட்ட உத்தியோகத்தர்களுக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், அன்றைய தினம் தங்களது பிள்ளைகளை டியூசனுக்கு அனுப்புவதைத் தவிர்த்துக் கொள்ளுமாறு பெற்றோர்கள் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

இவ்வறிவுறுத்தலை மீறும் தனியார் கல்வி நிலையங்களின் அனுமதிப் பத்திரம் இரத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

# வலிமையான மனிதர்களில் எளிமையான புரட்சியாளர்கள் கௌரவிப்பு







**( வாஸ் கூஞ்ஞ)**

ஏர்நிலம் அமைப்பினால் தைபூச நன்நாளை முன்னிட்டு ஏற்பாடு செய்தணீருந்த விவசாயிகள் கைம்பணி செய்பவர்களை கௌரவிப்புடனான 2023 ஆம் ஆண்டுக்கான பொங்கல் விழா 11.02.2023 அன்று மாவடி சித்தி விநாயகர் ஆலயம் மாங்குளத்தில் சிறப்புரவே இடம் பெற்றது

தள்ளாடும் வயதிலும் தளராத நம்பிக்கையுடன் தொழில் செய்யும் 10 விவசாயிகள் கைம்பணி உற்பத்தியாளர்களை இனம்கண்டு அவர்களை வாழும் வயதினிலே வாழ்த்திய நிகழ்வாக இது இடம் பெற்றது.

இவ்நிகழ்வில் கலை நிகழ்வுகள்இ உரைகள்இ பரிசில்கள் பொங்கல்இ உணவு போன்ற நிகழ்வுகளும் இடம்பெற்றது.

நிகழ்வை ஏற்பாடு செய்த ஏர்நிலத்திற்கும்இ‘ ஏர் நிலம்‘ அமைப்பு ஏற்பாடு செய்திருந்த இவ் நிகழ்வில் மாங்குளம் விவசாயிகள் ஏர்நிலம் செயலாற்றுனர்கள்இ கைம்பணி உற்பத்தியாளர்கள் முன்பள்ளிகள்இ பொது அமைப்புகள்இ கல்வி நிலையங்கள்இகிராம மட்ட அமைப்பினர்இ கிராம மக்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

# சிவனொளிபாதமலையில் பிறந்த குழந்தை

**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

சிவனொளிபாதமலைக்கு வழிபாட்டுக்காக வந்த ஒரு பெண்ணொருவருக்கு ஆலயத்தில் பெண் குழந்தை பிறந்துள்ளது. யாத்திரைக்கு வந்த இந்த பெண் நேற்று முன் தினம் (11) இரவு குழந்தையை பிரசவித்ததாகவும், புதிதாக பிறந்த குழந்தையும் தாயும் டிக்கோயா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த இரு தினங்களாக சிவனொளிபாதமலைக்கு நாடளாவிய ரீதியில் பெருமளவான யாத்திரிகர்கள் வருகை தந்திருந்த நிலையில், இரத்தினபுரி மாரப்பன பிரதேசத்தைச் சேர்ந்த கர்ப்பிணித் தாயார் ஒருவர் நேற்று முன் தினம் மாலை நீண்ட நேரம் நின்று வழிபாடு செய்து கொண்டிருந்தார்.

இத் தாய்க்கு திடீர் பிரசவ வலி ஏற்பட்டு இரவு 7.30 மணியளவில் குழந்தையும் பிறந்துள்ளது. அங்கிருந்த வந்த பெண் பக்தர்களும் மேற்படி தாய்க்கு உதவி புரிந்துள்ளனர். பொலிஸாரின் உதவியுடன் உடனடியாக தாயும் சேயும் நல்லதண்ணி பகுதிக்கு கொண்டுவரப்பட்டு சுவசெய அம்புலன்ஸ் வண்டிமூலம் டிக்கோயா ஆரம்ப வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர்.

குழந்தையை பிரசவித்த தாய் மற்றும் பிறந்த குழந்தை ஆரோக்கியமாக இருப்பதாக டிக்கோயா ஆதார வைத்தியசாலை தெரிவித்துள்ளது.

# இளஞ் சைவ பண்டிதர்/சைவ பண்டிதர்தேர்வு பரீட்சைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன

இளம் சந்ததியினரிடையே சைவத்தையும் தமிழையும் வளர்க்கும் பொருட்டு சைவத்தமிழ் மன்றம் கடந்தகாலங்களில் பல பணிகளை யாற்றிவருகின்றது. அதன் பணிகளில் ஒன்றாக சைவத்தினையும் தமிழையும் அதன் தத்துவார்த்த நுட்பங்களையும் அனைவரும் கற்றுய்ய வேண்டி சைவ உயர் பட்டத் தேர்வான சைவபண்டிதர் தேர்வினை நடாத்துகிறது. இது கலைமாணி பட்டத்துக்கு நிகரான தரப்பெறுமான அளவுள்ள (இணூனுஞீடிஞ) பாடத்திட்டங்களைக் கொண்டது.

இப்பட்டம் இரு நிலைகளைக் கொண்டது. முதல் நிலை இளம் சைவபண்டிதர். இது ஐம்பது தரப் பெறுமான அளவுள்ள (50 இணூனுஞீடிஞ) பாடப்பரப்பினைக் கொண்டதாகும். இரண்டாம் நிலை சைவபண்டிதர். இது எழுபது தரப் பெறுமான அளவுள்ள (%0 இணூனுஞீடிஞ) பாடப்பரப்பினைக் கொண்டதாகும். இப்பட்டப் பரீட்சைகள், தமிழ்மொழியும் இலக்கணமும், சைவசித்தாந்தம், வரலாறு, திருமுறைகளும் தோத்திரங்களும், சைவவாழ்வியல் என்னும் ஐந்து பாடங்களில் நடைபெறும். மேலதிக விபரங்களையும் விண்ணப்பப் படிவத்தினையும் டஞ்ஞணீண்://ண்டணிணூஞதணூடீ.ச்ஞ/ட்திதுஓ6 என்னும் இணையத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தகவல்: பொதுச்செயலாளர், சைவத் தமிழ் மன்றம் (0%52845295/0%52386958/0%%6529556 )

# மேல் கோத்மலை நீர்த்தேக்கத்திலிருந்து முதியவர் ஒருவரின் சடலம் மீட்பு

**(தலவாக்கலை பி.கேதீஸ்)**

மேல் கொத்மலை நீர்த்தேக்கத்திலிருந்து முதியவர் ஒருவரின் சடலம் நேற்று (12) பிற்பகல் மீட்கப்பட்டதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவித்தனர். நுவரெலியா பகுதியில் வசித்து வந்த எம்.ஜி.பிரேமதாஸ (வயது 71) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.



இவர் தலவாக்கலை ஹொலிரூட் பகுதியிலுள்ள தனது உறவினர் வீட்டிற்கு வந்துள்ள நிலையில் நேற்று பிற்பகல் இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

உயிரிழந்தவரின் சடலம் பிரேத பரிசோதனைக்காக நுவரெலியா மாவட்ட பொது வைத்தியசாலைக்கு கொண்டு செல்லப்படவுள்ளதுடன் இது தொடர்பான மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருவதாக தலவாக்கலை பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

# தேர்தல் கண்காணிப்பு குழு திருமலைக்கு விஜயம்..!

**(அ . அச்சுதன்)**

எதிர்வரும் காலங்களில் இடம்பெறவுள்ள உள்ளூராட்சி மன்ற தேர்தலை கண்காணிக்கும் முகமாக கஅஊஊகீஉஃ அமைப்பின் தேசிய இணைப்பாளர் திரு. சுஜீவ கயனத் மற்றும் திருகோணமலை எஹெட் கரிதாஸ் நிறுவனத்தின் பணிப்பாளர் அருட்தந்தை டாக்டர் போல் ரொபின்சன் அடிகளாரிற்கும் இடையிலான சுமூக சந்திப்பொன்று (12.02.2023) மாலை 2.00 மணி அளவில் எஹெட் கரிட்டாஸ் நிறுவனத்தில் இடம்பெற்றது.



எதிர்வரும் காலங்களில் சுயாதீனமாக தேர்தலை கண்காணிக்கும் முகமாக மாவட்ட மட்டத்தில் புதிய தேர்தல் கண்காணிப்பு உறுப்பினர்களை தெரிவு செய்யும் பொறுப்பு மற்றும் வன்முறைகளில் ஈடுபடுபவர்களை கண்காணித்து அதனை அறிக்கைப்படுத்தும் பொறுப்புகளும் இங்கே கலந்துரையாடப்பட்டது. அத்துடன் எதிர்காலத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தலில் போட்டியிடும் போட்டியாளர்களை எவ்வாறு பொதுமக்கள் தெரிவு செய்ய வேண்டும் தமது வாக்குகளை எவ்வாறு பயன்படுத்த வேண்டும் எனவும் கலந்துரையாடப்பட்டது. அத்துடன் தேர்தல் கண்காணிப்பு தொடர்பான வழிகாட்டல் கைநூலும் பணிப்பாளருக்கு கையளிக்கப்பட்டது.

# நூறு கோடி மக்களின் எழுச்சி

**( வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் மாதர் அபிவிருத்தி ஒன்றியம் எதிர்வரும் 14.02.2023 செவ்வாய் கிழமை காலை 9 மணியிலிருந்து காலை 11 மணிவரை பெண்களுக்கெதிரான வன்முறையற்ற வாழ்வைக் கொண்டாடுவோம் என்ற நூறு கோடி மக்களின் எழுச்சி நிகழ்வினை நடாத்துக்கின்றது.

நடைபெற இருக்கும் இவ்நிகழ்வானது மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன்னால் சுமார் நூறு பெண்களுடன் கொண்டாடுவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாக மன்னார் மாவட்ட பெண்களுக்கான அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் திருமதி மகாலட்சுமி குருசாந்தன் தெரிவித்துள்ளார்.

குறித்த இவ்நிகழ்வில் பாடல்கள் மற்றும் பெண்கள் பறை அடித்தல் போன்ற நிகவுகள் இடம்பெற இருக்கின்றன.

# கிழக்கு மாகாணத்தில் அரச நிதி வீண்விரயம்

## இம்ரான் எம்.பி குற்றச்சாட்டு!

**இறக்காமம் மேலதிக நிருபர்**

கிழக்கு மாகாணத்தில் அரச நிதி வீண் விரயம் செய்யப்படுகின்றது. நாடு தற்போதுள்ள நிலையில் இதனைத் தவிர்த்தால் பல இலட்சம் ரூபாய்களை மாதாந்தம் மீதப்படுத்த முடியும் என திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இம்ரான் மகரூப் தெரிவித்தார்.

குறிஞ்சாக்கேணிப் பகுதியில் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே இவ்வாறு அவர் கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

அரசாங்கம் நிதி நெருக்கடியில் உள்ளதாக ஜனாதிபதியும் ஏனையோரும் கூறி வருகின்ற போதிலும் அவர்களே நிதி வீண் விரயங்களும் செய்து வருகின்றனர். இப்படி இருந்தால் எப்படி நாட்டை முன்னேற்ற முடியும் எனக் கேட்க விரும்புகின்றேன்.

ஓய்வு பெற்ற அரச உத்தியோகத்தர்களுக்கு மீள் நியமனமோ சேவை நீடிப்போ வழங்குவதில்லை என ஜனாதிபதி குறிப்பிட்டிருக்கின்ற போதிலும் கிழக்கு மாகாணத்தில் ஓய்வுபெற்ற பிரதிப் பிரதம செயலாளர் ஒருவருக்கு இம்மாகாண ஆளுநர் சேவை நீடிப்பு வழங்கியுள்ளார். இந்தப் பதவிக்கு பொருத்தமானவர்கள் கிழக்கு மாகாண அரச சேவையில் இருக்கின்ற போதிலும் தனது சுய நலம் கருதி ஆளுநர் இந்த சேவை நீடிப்பை வழங்கியுள்ளார்.

உயர் அதிகாரிகளின் பதவி தொடர்பான சகல விடயங்களும் பொதுச் சேவை ஆணைக் குழுவுக்குரியது. பொதுச்சேவை ஆணைக் குழு செய்ய வேண்டிய பணியை இப்போது ஆளுநர் செய்கின்றார். இந்த அரசாங்கத்தினால் பொதுச் சேவை ஆணைக்குழுவின் அதிகாரம் குறைக்கப்பட்டுள்ளதா அல்லது அங்கும் அரசியல் அழுத்தங்கள் பிரயோகிக்



கப்படுகின்றதா என்ற கேள்வி எழுகின்றது.

கிழக்கு மாகாணக் கல்விப் பகுதியில் ஓய்வு பெற்றவர்கள் ஒப்பந்த அடிப்படையில் நியமிக்கப் பட்டுள்ளனர். இவர்கள் ஓய்வூதியமும் பெற்று மாதச் சம்பளமும் பெற்று வருகின்றனர். தகுதியானவர்களுக்கு பொருத்தமான இடமாற்றங்களை வழங்கி ஓய்வு பெற்றவர்களை வீட்டுக்கு அனுப்பினால் பெருந்தொகையை மீதப்படுத்தலாம்.

கிழக்கு மாகாணசபையில் உள்ள வீடமைப்பு அதிகாரசபை மாகாண மக்களுக்கு வீடு கட்டிக் கொடுத்ததை விட தவிசாளரும், பணிப்பாளர் சபையினரும் ஏனையோரும் பெறும் கொடுப்பனவுகளே அதிகமாகும். இந்த வீண்விரயம் குறித்து ஏன் கவனம் செலுத்த வில்லை. அதேபோல சுற்றுலா அதிகார சபை மூலம் மாகாண சபை பெற்ற வருமானம் ஏதும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால் அங்கு தவிசாளரும், பணிப்பாளர் சபையினரும் ஏனையோரும் மாதாந்தம் சம்பளம் பெறுகின்றனர்.

இது கிழக்கு மாகாணத்தில் உள்ள நிதி வீண்விரயங்களுக்கு உதாரணம். இது போல ஏனைய மாகாணங்களிலும், மத்திய அரசிலும் உள்ளன. இது போன்ற வீண்விரங்களை அரசு குறைத்து மக்களின் சுமைகளைக் குறைக்க முடியும்.

ஆனால் அரசாங்கம் இப்படியான வீண்விரயங்களைக் குறைக்காது. ஏனெனில் இதன் மூலம் நன்மை பெறுபவர்கள் அரசிலுள்ள முக்கியஸ்தர்களுக்கு வேண்டப்பட்டவர்கள். இதிலிருந்து நாம் விளங்கிக் கொள்வதென்ன? மக்கள் எப்படி கஸ்டப்பட்டாலும் தான் சார்ந்தவர்கள் மட்டும் நன்மையடைய வேண்டும் என்ற கொள்கையை இந்த அரசிலுள்ளவர்கள் பின்பற்றுவதாகும்.

எனவே, மக்களைக் கஸ்டப்படுத்தி தான் சார்ந்தவர்களுக்கு பயன்பெற்றுக் கொடுக்கும் இந்த அரசாங்கத்தை வீட்டுக்கணுப்ப அனைவரும் இந்த தேர்தலில் அரசாங்கத்தக்கு எதிராக வாக்களிக்க வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# நாட்டை மீட்க வேண்டுமாக இருந்தால் சஜித் ஒன்றே தீர்வு!

## ஊடகச் சந்திப்பில் சஜித் இணைப்பாளர் வினோகாந்த் காட்டம்!

**(வி.ரி.சகாதேவராஜா)**

முன்னொருபோதுமில்லாத வகையில் நாடு பொருளாதார நெருக்கடியால் அதல பாதாளத்தில் வீழ்ந்துள்ளது. இதனை மீளக்கட்டி எழுப்ப வேண்டுமாக இருந்தால் இன்று இருக்கின்ற ஒரே ஒரு தீர்வு சஜித் பிரேமதாசா மாத்திரமே.

இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் அம்பாறை மாவட்ட இணைப்பாளரும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசாவின் தமிழ்ப்பிரிவு இணைப்பாளருமான வெள்ளையன் வினோகாந்த் நேற்று(12) ஞாயிற்றுக்கிழமை ஊடகவியலாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

இந்த ஊடகவியலாளர் மாநாடு(12) ஞாயிற்றுக்கிழமை காரைதீவிலுள்ள அம்பாறை ஊடக மையத்தில் இடம் பெற்றது .

அங்கு அவர் மேலும் கூறுகையில்.

இலங்கையில் கடந்த ஆறுதசாப்த காலமாக மக்கள் வாக்களித்து வந்திருக்கின்றார்கள். ஆனால் இம்முறை முதல் தடவையாக ஐக்கிய மக்கள் சக்தி நாட்டில் சகல பாகங்களிலும் தேர்தலில் இறங்கி உள்ளது. %0 -80- 90 களில் ஜனசவிய கம்முதாவ போன்ற பல திட்டங்களை நாட்டுக்கு புகுத்தி மக்களை விமோசனப்படுத்திய அமரர் பிரேமதாச அவர்களின் புதல்வன் சஜித் பிரேமதாசா ஒரே ஒரு முதுகெலும்புள்ள தலைவராக இருக்கிறார்.

ஆளும் கட்சியில் இல்லாமலே தற்போது 70 பாடசாலைகளுக்கு 3400 லட்சம்



ரூபாய் பெறுமதியான பஸ்களை வழங்கி இருக்கின்றார். 56 வைத்தியசாலைகளுக்கு 1919 இலட்ச ரூபாய் பெறுமதியான மருத்துவ உபகரணங்கள் வழங்கப்பட்டிருக்கின்றன. 128 லட்ச ரூபாய் பெறுமதியான பாடசாலை உபகரணங்கள் வழங்கப்பட்டிருக்கின்றது. இவ்வளவு சேவையை எதிர்க்கட்சியில் இருந்து கொண்டு செய்தவர் சஜித்.

இங்கு அம்பாறை மாவட்டத்திலேயே 20 உள்ளூராட்சிசபைகள் உள்ளன. ஏழு சபைகள் சிங்கள சபைகள். ஏனைய பதின்மூன்று தமிழ் முஸ்லிம் சபைகளிலே எனக்கு ஆலையடிவேம்பு காரைதீவு திருக்கோவில் ஆகிய பிரதேதேச சபைகள் பொறுப்பு அளிக்கப்பட்டு இருக்கின்றது.

ஐக்கிய மக்கள் சக்தி நிச்சயமாக இந்த சபைகளிலே வெற்றி பெறும் என்பதில் மாற்று கருத்துக்கள் இல்லை .

நாங்கள் கிராம ரீதியாக ஒவ்வொரு பிரதேசத்திலும் பல பிரச்சினைகளை இனங்கண்டு இருக்கின்றோம். அவற்றை தீர்ப்பதற்கான திட்டத்தையும் வகுத்திருக்கின்றோம். மார்ச் மாதம் ஒன்பதாம் தேதிக்கு பிற்பாடு இவை அனைத்தும் அமுலுக்கு வரும்.

இன்று பசித்தவர் தொடர்ந்து காய்ந்து கொண்டிருக்கின்றார்கள். ஆகவே இன்றையதேர்தல் காலத்தில் இலவசங்கள் தொடர்பாக பலரும் வாக்குறுதி அளிப்பார்கள் .

அதற்கு அடிபணியாமல் சோரம் போகாமல் உண்மையான தலைவர்களுக்கு மக்கள் வாக்களிக்க வேண்டும் .

கடந்த 25 வருடங்களாக ரணில் பல பதவிகளை வகுத்து பல வாக்குறுதிகளை அளித்துள்ளார்.

எதனையுமே அவர் செயல்படுத்த வில்லை. அதுபோலவே நாட்டின் இனப்பிரச்சினையை அவரால் தீர்த்து வைக்க முடியாது .

தேர்தல் காலத்தில் மட்டும் இவ்வாறான சிந்தனை அவருக்கு வருவது வழமை. தேர்தல் முடிந்ததும் அவற்றை மறந்து விடுவார். அதனால் தான் நான் சொல்கிறேன் அவரால் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண முடியாது என்று.

மக்களே ஏமாந்து விடாமல் எமது ஐக்கிய மக்கள் சக்தி வாக்களித்து உங்களையும் நாட்டையும் காப்பாற்றிக் கொள்ளுங்கள்.என்றார்.

# பலசரக்கு கடைகளில் உணவு மாதிரிகளை பரிசோதிக்க திடீர்ப் பாய்ச்சல்.!



**( வி.ரி. சகாதேவராஜா)**

காரைதீவு பிரதேசத்தில் உள்ள பலசரக்கு கடைகளில் வெள்ளிக்கிழமை உணவு மாதிரிகளை சோதிக்க திடீர் பாய்ச்சல் நடாத்தப் பட்டது.

காரைதீவு பிரதேச சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையின் பொதுச்சுகாதார உத்தியோகத்தர்கள் இந்த திடீர் பரிசோதனையை மேற்கொண்டார்கள்.

சிரேஸ்ட பொதுச் சுகாதார பரிசோதகர் ஜமீல் தலைமையிலான சுகாதார பரிசோதகர்கள் இந்த பரிசோதனையில் ஈடுபட்டார்கள்.

சுமார் ஐந்து கடைகள் நேற்று வெள்ளிக்கிழமை பரிசோதனை குழுவினரின் பாய்ச்சலுக்கு இலக்கானது.

உணவுப் பொருட்களின் மூன்று உணவு மாதிரிகள் பெறப்பட்டு ஒன்று சோதனைக்காக கொழும்புக்கு அனுப்பப்பட்டுள்ளன.

## தேற்றாத்தீவு கொம்புச்சந்திப்பிள்ளையார் ஆலயத்தில்

# மஹா சிவராத்திரி விரத சிறப்பு நிகழ்வுகள்



**(தேற்றாத்தீவு)**

மஹா சிவராத்திரி விரத சிறப்பு நிகழ்வுகள் தேற்றாத்தீவு கொம்புச்சந்திப் பிள்ளையார் ஆலயத்தில் எதிர்வரும் சனிக்கிழமை (18) சிறப்பாக நடைபெற உள்ளன. கொம்புச்சந்திப்பிள்ளையார் ஆலயத்திற்கு சித்தர்களால் நர்மதா நதிக் கரையில் இருந்து கொண்டு வரப்பட்ட பிரதிஸ்டை பண்ணப்பட்டிருக்கும் உயிர் லிங்கத்திற்கு அடியார்கள் ஆலய புனித கங்கையாகிய பாலாறு "பால புஸ்கரணி" தீர்த்தக்கங்கையில் தீர்த்த நீர் எடுத்துவந்து தங்கள் கைகளினால் அபிஷேகம் பண்ணும் சிறப்பு நிகழ்வு காலை தொடக்கம் பின்னிரவு வரை இடம் பெறும்.

இதன் போது தங்களது ராசிகளுக்குரிய அபிஷேக திரவியங்களாலும் அபிஷேகம் பண்ணுவதற்குரிய ஒழுங்குகள் செய்யப் பட்டுள்ளன.அந்த வகையில்

மேஷ ராசி வெல்லம் கலந்த நீர்,ரிஷப ராசி

தயிர் ,மிதுன ராசி

கரும்பு சாறு ,கடகராசி

சர்க்கரை சேர்ந்த பால் மந்தாரை பூ,

சிம்ம ராசி பால்,

கன்னி ராசி

பால் அல்லது நீரால்,

துலாம் ராசி

பசும்பால்

விருச்சக ராசி

தேன் அல்லது சர்க்கரை கலந்த நீரால்,

தனுசு ராசி

குங்குமப்பூ கலந்த பால் அபிஷேகம்,

மகர ராசி நல்லெண்ணெய்

கும்ப ராசி இளநீர் அல்லது கடுகு எண்ணெயை,

மீனராசி குங்குமப்பூ பால் ஆலயத்தில் நான்கு சாமப் பூஜைகளும் லிங்கோற்பவர் காலத்தில் ஏகாதச ருத்ர மஹா வேள்வியும் இடமபெறவுள்ளமையும் குறிப்பிடதக்கவிடயம்.மாலை 6 மணி தொடக்கம் அதிகாலைவரை பஜனை சங்கீதக்கச்சரி நடனம்கதாப்பிரசங்கம் சமய பேருரைகள் என்பன இடம் பெறும். என ஆலய பரிபான சபையின் தலைவர் த.விமலானந்தராஜா தெரிவித்தார்.

# மன்னார் ஆயர் ஆயராக திருநிலைப்படுத்தப்பட்ட 11 வது ஆண்டு நினைவு தினம்





**( வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு லயனல் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை ஆயராக திருநிலைப்படுத்தப்பட்டு 11 வருடங்களை நினைவுகூர்ந்து மன்னார் மறைமாவட்ட யாத்திரிகர் ஸ்தலங்களில் ஒன்றான மாந்தை மாதாவின் புனித ஸ்தலத்தில் மாந்தை பங்கு மக்களும் பங்குத் தந்தையுமான அருட்பணி யே.அமல்ராஜ் குரூஸ் அடிகளார் ஆயரின் திருநிலைப்படுத்தல் தினத்தை கேக் வெட்டி கொண்டாடினர்.

மாந்தை மாதா திருவிழா அன்று சனிக்கிழமை (11) இவ் நிகழ்வு திருவிழா முடிந்ததும் பக்தர்கள் மற்றும் அருட்பணியாளர்கள் துறவறச் சார்ந்தவர்கள் புடைசூழந்திருந்த நிலையில் பங்கு தந்தை அருட்பணி யே.அமல்ராஜ் குரூஸ் அடிகளார் குரு முதல்வர் பி.கிறிஸ்துநாயகம் அடிகளார் ஆகியோர் ஆயருடன் இணைந்து கேக் வெட்டும் இவ் நிகழ்வு இடம்பெற்றது.

ஆயர் அவர்கள் 6 வருடங்கள் கொழும்பு மறை மாவட்டத்தில் துணை ஆயராக இருந்ததுடன் 5 வருடங்கள் மன்னார் மறைமாவட்ட ஆயராகவும் இருந்து வருகின்றார்.

# அபூர்வமான அத்தியின் மகத்துவம்!

'அத்தி பூத்தால் போல' என்று பழமொழி இருக்கின்றது .அதன் அர்த்தம் அத்தி ஒருபோதும் பூப்பதில்லை .நடக்காத காரியத்தை சொல்லி வைப்பது .

இத்தி மரம் இத்திக்காய் பற்றியெல்லாம் பொதுவாக அறிந்திருக்கிறோம்.

ஆனால் இந்த அத்தி மரம் பற்றி அறிந்த விடயங்கள் வியப்பாக இருந்தது. அத்தி மரம் தேடி கிழக்கில் அலைந்து இறுதியாக அருகிலுள்ள சாய்ந்தமருதில் ஒரேயொரு இடத்தில் இருப்பதாக அறிந்து அங்கு சென்றோம்.

சாய்ந்தமருது பத்தாம் பிரிவில் உள்ள அபூபக்கர் மொகமட் பழீல் என்பவரின் வீடு அது.

அன்பாக வரவேற்ற பழீல் ஏலவே அறிமுகமானவர். இயற்கை மருத்துவத்தில் கைதேர்ந்தவர். ஆனால் வெளிநாடுகளில் பிரசித்தி பெற்ற மக்டொனால்ட் கம்பனியில் இருபது வருடங்களாக உணவுப் பிரிவில் பணியாற்றியவர். நேர்மையான இனிய சுபாவம் நிறைந்தவர்.

அவர் எம்மை அவரது வீட்டின் மொட்டை மாடிக்கு அழைத்து சென்று அங்கு சட்டிகளில் வளரும் அத்தி மரத்தைக் காட்டினார். சில



மரங்களில் பழங்களுமிருந்தன.

அவர் இந்த அத்தி தொடர்பான பல விடயங்களை சொன்னார்.

அத்தி அரபு நாட்டுக்கு சொந்தமான அபூர்வமான தாவரம்.

அல் குர்ஆனில் அத்தி சைத்தூன் ஆகிய இரண்டு மரங்களில் சத்தியம் செய்ததாக கூறப்படுகின்றது. அத்துணை முக்கியத்துவம் வாய்ந்தது இந்த அத்திமரம்.

இதன் இலை காய் பழம் என்பது அபூர்வமான நோய் நிவாரணிகளாகும். இதனை சர்வரோக நிவாரணி என்று சொல்லலாம் .

கேன்சர் புற்றுநோய்க்கு அத்திப் பழம் சிறந்த பலன் அளிக்கின்றது. அதன் இலை கபம் சளி இரத்த குழாய் அடைப்பு போன்றவற்றையெல்லாம் இலகுவாக நீக்குகின்றது.



## இனப்பரம்பல்

இதனை விதையையோ தண்டையோ பயன்படுத்தி உருவாக்கமுடியாது.

விதையை நேரடியாக நட்டு இனப் பெருக்கம் செய்ய முடியாது.

ஒரு அத்திபழத்தை எடுத்து ஒரு பறவைக்குக் கொடுத்து அந்தப் பறவை இடுகின்ற எச்சத்தில் இருந்து தான் இன்னொரு தாவரத்தை அதாவது அத்தி தாவரத்தை உருவாக்கலாம் .

இந்த அத்தி மரத்தை ஓமானில் இருந்து கொண்டு வந்து மிகவும் கவனமாக அதனை பயிரிட்டேன்.

ஒரு கிலோ பழம் நான்காயிரம் ரூபாய்க்கு விற்கின்றேன் .உலர வைத்த பழம் ஆறாயிரம் ரூபாய்க்கு விற்கின்றேன் .

ஒரு இலைக்கு அருகில் ஒரு காய் காய்க்கும் .90 நாட்களிலே அதாவது மூன்று மாதத்தில் அது பழுத்து விடும்.

அரபு நாடுகளிலே கஞ்சி காய்ச்சுவதற்கு இதனை பயன்படுத்துகின்றார்கள். பிரான்சில் ஏற்றுமதி பயிராக இது பயன்படுகின்றது. ஒவ்வொரு அத்திப் பழமும் 90 கிராம் எடையுள்ளதாக இருக்கின்றது .அதில் 12 அத்திப்பழங்கள் வருகின்ற பொழுது ஒரு கிலோ வரும். இது ஒரு சர்வரோக நிவாரணியாகும் என்று தெரிவித்தார்.

**வி.ரி.சகாதேவராஜா**
**காரைதீவு நிருபர்**




ஆரோக்கிய இல்ல சேவைகள் நிலையம்

கல்முனை

பராமரிப்பு சேவை தேவையா?

துப்பரவாக்க உதவி தேவையா?

கல்முனையில் இதோ அரியதோர் வாய்ப்பு

கல்முனை நீதிமன்றத்திற்கு முன்னால் திறந்து வைக்கப்பட்டுள்ள ஆரோக்கிய இல்ல சேவைகள் நிலையத்தில் வழங்கப்படும் சேவைகள் ....

1.முதியோர் மற்றும் சிறுவர்களை வீட்டில் அல்லது வைத்தியசாலையில் வைத்துப் பராமரிக்கும் சேவைகள்.

2.நோய்வாய்ப்பட்டு உதவியின்றி அல்லது ஆதரவின்றி இருக்கும் நோயாளர்களை வீட்டிலோ அல்லது வைத்தியசாலையிலோ பராமரித்தல்.

3.வீடுகள் அரச நிறுவனங்கள் மத தலங்கள் மற்றும் தேவையான இடங்களை துப்பரவு செய்யும் சேவை

4.துப்பரவாக்கும் பணிக்கு தேவையான சகல இரசாயன மூலப்பொருட்களோடும் சகல உபகரணங்களோடும் வீட்டுக்கு அல்லது உரிய இடங்களுக்கு வந்து செய்து கொடுக்கப்படும்.

5. ஆதரவின்றி அல்லது உதவியின்றிய மக்கள் பயன்படுத்தும் வீட்டுச்சூழல் அல்லது அலுவலக வளாகங்களில் உள்ள தோட்டங்களை நவீன முறையில் உபகரண உதவியோடு சுத்தம் செய்து அழகு படுத்தி தரப்படும்.

6.வெளிநாடுகளுக்கு சுகாதார சேவை தொடர்பான தொழில்களுக்கு செல்லும் தொழிலாளிகளுக்கான பயிற்சிகள் அதற்கான அரசாங்க சுகாதார அமைச்சினால் அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ் என்பன வழங்கப்படும் .

7.புதிய வீடுகள் நிருமாணிப்பதற்கு அரச அங்கீகாரம் பெறுவது முதல் சகல நிர்மாணப்பணிகளும் செய்து கொடுக்கப்படும்.

8. வீடு அல்லது கட்டட நிர்மாணத்திற்குப் பயன்படும் கருவிகளும் உபகரணங்களும் வாடகைக்கு விடப்படும்.



மேற்படி சேவைகளுக்காக எம்மிடம் நன்கு பயிற்சி பெற்ற தொழிலாளிகள் மற்றும் அதற்கான சகல இரசாயன பொருட்கள் மற்றும் உபகரணங்கள் எம் கைவசம் உள்ளன.

சேவைகள் யாவும் 24 மணி நேரமும் கிடைக்கும் என்பதை தெரிவிப்பதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

தொடர்புகளுக்கு: 0759899051, 0777666234
சந்திரசேகரம் ராஜன், உரிமையாளர், கல்முனை

# வடக்கு கிழக்கு வாழ் தமிழர்களின் சிந்தனைக்கு..!



**-பா.அரியநேத்திரன்-**

உள்ளூராட்சி சபை தேர்தலில் போட்டியிடுவோரால் செய்ய முடியுமான செயற்பாடுகள் இவைதான். அறிந்து கொள்ளுங்கள்.

01 .பொதுச் சுகாதாரம்
02 .திண்மக் கழிவகற்றல்
03. பாதைகளை அமைத்தலும் பராமரித்தலும்
04. வடிகானமைத்தல் பராமரித்தல்
05 .தெருக்களுக்கு வெளிச்சம் தருதல்
06. சிறுவர் பூங்காக்களை உருவாக்குதலும் பராமரித்தலும்
0%. விளையாட்டு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்
08.இடுகாடுகள்,சுடுகாடுகளை அமைத்தலும் பராமரித்தலும்
09. நூலக வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்
10. பொது மல சல கூடங்களை அமைத்தலும்,பராமரித்தலும்.
11. கிராமிய நீர் வினியோகம்
12. பொது நீராடல் நிலையங்களை அமைத்தல்
13. தீயணைப்பு சேவைகள்
14. தாய் சேய் நலப்பணி
15. பிரதேசத்தை அழகுபடுத்தலும் சுத்தம் பேணலும்
16. பொதுக் கட்டிடங்களை நிர்மாணித்தலும் பராமரித்தலும்
1%. தொற்று நோய் தடுத்தல்
18. திடீர் அனர்த்த முன்னாயத்தமும் செயற்பாடுகளும்
19.அபிவிருத்திக் கருத்திட்டங்களை இனங்கண்டு நடைமுறைப்படுத்தல்
20. கால்நடை பன்னைகளை நடாத்துதல்
21. வறியோருக்கு நிவாரணம் வழங்கல்.

இவற்றுடன் சேர்ந்த ஊர் அபிவிருத்தி செயல்பாடுகள் மட்டுமே..!

உள்ளூராட்சி சபைமூலம் செய்யக்கூடிய அதிகாரம் இவைகள் மட்டுமே என்பது உண்மை,

ஆனால்.

அதற்காக உள்ளூராட்சிசபை தேர்தல் தமிழ்தேசிய அரசியலுக்கு முக்கியமான ஒன்று இல்லை என எவரும் நினைத்து விடாதீர்கள் ஒவ்வொரு தமிழ் மகனும் இதை உணர்ந்து கொள்வது கட்டாயம்..

இலங்கை சுதந்திரம் அடைந்த அரசியல் வரலாற்றில் கடந்த %5, வருடங்களாக பல் சமூகம் வாழும் இந்த நாட்டில் தமிழ்தேசிய இனம் எல்லா விடயங்களிலும் புறக்கணிக்கப்பட்டு எமது பூர்வீக நிலம் அபகரிக்கப்பட்டு, பறிக்கப்பட்டு, கபளீகரம் செய்யப்பட்டு சுதந்திரம் இல்லாதஅடிமைகளாக வாழும்நிலை தொடர்கிறது.

எமது இனத்தின் விடுதலைக்காக அகிம்சைரீதியிலான போராட்டங்கள்,இனம் சார்ந்த அரசியல் செயல்பாடுகள், ஏன் 19%6,மே,14,ல் தமிழர் விடுதலைக்கூட்டணியில் இலங்கைத்தமிழ் அரசுக்கட்சி ஒரு முக்கிய கட்சியாக இணைந்து வட்டுக்கோட்டை தீர்மானத்தை எடுத்த தந்தை செல்வா இலங்கை தமிழரசுகட்சி தலைவராக இருந்தவர்தான்.

தொடர்ந்தும் இலங்கைத்தமிழ் அரசுக்கட்சியை பலப்படுத்தும் தேவை வடக்கு கிழக்கு தாயகத்தில் வாழும் ஒவ்வொரு தமிழ் மகனுக்கும், தமிழ் மகளுக்கும் உண்டு. அந்த பலப்படுத்தலை தமிழ் மக்கள் தேர்தல்கள் மூலமே வெளிக்காட்டவேண்டுமே தவிர அவர்களுக்கு வேறு சந்தர்ப்பங்கள் இல்லை அது எந்த தேர்தலாக இருந்தாலும் தமது இனம் சார்ந்து குரல்கொடுக்கும் கட்சியை முதன்மைப்படுத்தி உள்ளூராட்சி தேர்தலிலும் வாக்களப்பது வரலாற்றுக்கடமையும் பிறப்புரிமையும் ஆகும்.

அந்த கட்சி இலங்கைத்தமிழரசுக்கட்சி என்பதை மனதில் ஒவ்வொருவரு தமிழரும் மனப்பாடம் செய்யவேண்டும்.

உள்ளூராட்சி சபைத்தேர்தல் எதிர்வரும் 2023, மார்ச்,09,ல் முடிவுற்ற பின்னர் தேர்தல் முடிவுகளை வைத்து ஆய்வு செய்யும் அரசியல் ஆய்வாளார்கள், சர்வதேச இராஜதந்திரிகள், ஏன் அயல்நாடான இந்தியா வரை முதலில் எந்தக்கட்சி எத்தனை வீதம் வாக்குகளை பெற்றுள்ளனர், எந்தக்கட்சி மக்கள் செல்வாக்கை இழந்துள்ளது என்றே ஆய்வு செய்வார்களேதவிர வேட்பாளர்களை வைத்து அல்ல.

வடக்கு கிழக்கை பொறுத்தவரைதமிழ்தேசிய இனம் தமது உரிமைக்காக குரல்கொடுக்கும் கட்சியை விட்டு சிங்களக்கட்சிகளுக்கும், அரசாங்க ஆதரவு கட்சிகளுக்கும் சோரம் பொய் விட்டார்களா என்ற கணிப்பீடும் இந்த தேர்தலில் வெளிக்காட்டப்படும் என்ற உண்மையை புரிந்து கொள்வது தமிழ் இளைஞர்களின் கடமை.

பொதுவாக உள்ளூராட்சி செயல்பாடுகள் ஊர் பிரதேச அபிவிருத்தியாக இருந்தாலும் தேர்தல் முடிவுகள் அவர்கள் போட்டியிடும் கட்சிகள் தொடர்பாகவே வெளிவரும் என்ற கசப்பான உண்மை இந்த தேர்தலிலும் உண்டு.

எனவே தமிழர்கள் தமிழினத்தின் பூரண சுதந்திரம் சுயநிர்ணய உரிமை கிடைக்கும் வரை தந்தை செல்வாவால் கடந்த 1949, டிசம்பர்,18,ல் உருவாக்கப்பட்டு இன்று வரை சோரம்போகாமல் தமிழினத்தின் அரசியல் சக்தியாக செயல்படும் இலங்கைத்தமிழரசுக் கட்சியின் வீட்டுச்சின்னத்திற்கு நேரே புள்ளடி இட்டு தமிழினத்தின் அரசியல் பலத்தை சர்வதேசத்திற்கு வெளிக்காட்டுவோம்.

இது எமது தமிழ்த்தேசிய கடமை.!





காரைதீவு விபுலானந்த சதுக்கத்தில் அமைந்துள்ளஅரசடி ˆரீ சித்தி விநாயகர் ஆலய கும்பாபிஷேக தின அஷ்டோத்திர சத சங்காபிஷேக பூசை பாற்குடபவனியுடன் சங்காபிஷேககுரு சிவஸ்ரீ சண்முக மகேஸ்வர குருக்கள் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்ற போது...

படங்கள் . வி.ரி. சகாதேவராஜா

# நடன ஆசிரியர் நியமனம்- பல இலட்சம் மோசடி- கல்முனை போலிஸாரினால் நால்வர் கைது

(பாறுக் ஷிஹான் )

நடன ஆசிரியர் நியமனம் ஒன்றை பெற்றுத் தருவதாக கூறி பல இலட்சம் ருபாய்க்களை வங்கி ஊடாக மோசடி செய்த குழுவினர் கல்முனை தலைமையக பொலிஸார் விரித்த வலையில் சிக்கியுள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு கடந்த வியாழக்கிழமை(9) அன்று கல்முனை பகுதியை சேர்ந்த பொன்னம்பலம் கணேசன் என்பவர் முறைப்பாடு ஒன்றினை அளித்திருந்தார்.

அந்த முறைப்பாட்டில் நடன ஆசிரியர் நியமனம் ஒன்றினை பெறுவதற்கு கடந்த திங்கட்கிழமை(6) அன்று ஒரே நாளில் கட்டங் கட்டமாக முறையே 600000 120000 120000 என 840000 இலட்சம் ரூபாய்க்களை வங்கி ஊடாக ஒருவருக்கு வைப்பு செய்த நிலையில் ஏமாற்றப்பட்டுள்ளதாகவும் இந்த நியமனத்தை தனது மகனுக்கு பெற்றுக்கொடுப்பதற்காகவே குறிப்பிட்ட பணத்தொகைகளை வழங்கியதாகவும் குறிப்பிட்டிருந்தார். மேலும் இந்தியாவில் தனது மகன் நடன பாடத்தில் பட்டத்தை நிறைவு செய்திருந்த இந்த நியமனத்தை பெற முயற்சித்திருந்ததாகவும் கல்வி அமைச்சில் உள்ள ஒரு பதவி நிலை உயர் அதிகாரியின் பெயரை பயன்படுத்தி இந்த மோசடி இடம்பெற்றுள்ளதை பின்னர் அறிந்துள்ளதாக அம்முறைப்பாட்டில் குறிப்பிட்டிருந்தார்.

இந்த முறைப்பாட்டின் அடிப்படையில் கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திக வழிநடத்தலில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் ஆலோசனையில் கல்முனை குற்றப்புலனாய்வு பிரிவு பொறுப்பதிகாரியும் பிரதம பொலிஸ் பரிசோதகருமான அலியார் றபீக் தலைமையில் சென்ற பொலிஸ் கன்ஸ்டபிள்களான முஜிசாத் (88490) விஜிதரன்(90954) பெண் பொலிஸ் கான்ஸ்டபிள் செவ்வந்தி(13086) குழுவினர் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய 4 சந்தேக நபர்களை பொலிஸ் விசேட பிரிவின் தகவல் ஒருங்கிணைப்பிற்கமைய கைது செய்துள்ளனர்.

இந் நடவடிக்கையில் 2 பெண்கள் 2 ஆண்கள் பொலிஸாரினால் திருகோணமலை மட்டக்களப்பு பகுதிகளில் இருந்து கைதாகியதுடன் விசாரணைகளும் துரிதமாக மேற்கொள்ளப்பட்டுள்ளன. இவ்விசாரணையின் போது கைதானவர்களின் வாக்குமூலத்தின் படி சிறைச்சாலை ஒன்றில் சிறைவாசம் அனுபவிக்கின்ற நபர் ஒருவரின் தொடர்பின் பின்விளைவாக இச்செயற்பாடு முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் சிறையில் உள்ளவரே தம்மை வழிநடத்தி வருவதாகவும் குறிப்பிட்டுள்ளனர். மேலும் கைதான பெண் சந்தேக நபரின் வங்கி கணக்கில் தொடர்ச்சியாக அதிகளவான பணக்கொடுக்கல் வாங்கல்கள் இடம்பெற்று வந்துள்ளதையும் பொலிஸார் விசாரணையில் கண்டறிந்துள்ளனர்.

அத்துடன் நடன ஆசிரியர் நியமனத்திற்காக மற்றுமொரு பெண் சந்தேக நபரின் வங்கி கணக்கிலக்கத்திற்கும் ஏனைய சந்தேக நபர்களது வங்கி கணக்கிலக்கத்திற்கும் ஒரு நாளில் எட்டு இலட்சத்தி 40 ஆயிரம் வைப்பிலடப்பட்டுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

அத்துடன் குறித்த மோசடி கல்வி அமைச்சின் உள்ள அதிகாரி ஒருவரது பெயரை குறிப்பிட்டு மேற்கொள்ளப்பட்டள்ளதால் மேற்கொள்ளப்பட்டுள்ளதால் அவரும் பொலிஸ் நிலையத்திற்கு வாக்குமூலம் ஒன்றினை வழங்குவதற்காக அழைக்கப்பட்டுள்ளார். மேலும் குறித்த அதிகாரியும் ஏற்கனவே தனது பெயரில் இவ்வாறு மோசடி இடம்பெற்று வருவதாக கூறி பொலிஸ் நிலையங்களில் முறைப்பாடு வழங்கி இருப்பதாக பொலிஸாருக்கு தெரிவித்துள்ளார்.

மேலும் இம்மோசடியில் கைதான அனைத்து சந்தேக நபர்களையும் ஞாயிற்றுக் கிழமை(12) அன்று கல்முனை நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து எதிர்வரும் பெப்ரவரி மாதம் வெள்ளிக்கிழமை(17) வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

குறித்த சம்பவத்தில் இவ்வாறான செயற்பாடுகளை போன்று ஏதேனும் முறைப்பாடுகள் உள்ளனவா? அத்துடன் இவ்வாறான குழுக்களை உருவாக்கி சிறையில் இருந்து வழிநடத்தும் நபர்கள் தொடர்பிலும் விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# மாந்தை அன்னையின் பெருவிழா





(வாஸ் கூஞ்ஞ)

மன்னார் மறைமாவட்டத்தில் விளங்கும் யாத்திரிகர் ஸ்தலங்களில் ஒன்றான மாந்தை அன்னையின் வருடாந்த பெருவிழா சனிக்கிழமை (11) பங்குத் தந்தை அருட்பணி யே.அமல்ராஜ் குரூஸ் அவர்கள் ஒழுங்கமைப்பின் கீழ் நடைபெற்றபோது மன்னார் ஆயர் மேதகு இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் கூட்டுத் திருப்பலி ஒப்புக் கொடுப்பதையும்

திருச்சுரூப பவனியைத் தொடர்ந்து ஆயர் அவர்களால் திருச்சுரூப ஆசீர் வழங்கப்படுவதையும் கலந்துகொண்ட பக்தர்களின் ஒரு பகுதினரையும் படங ;களில் காணலாம்.

# பிக்குகள் அரசியல் யாப்பின் 13 ஆம் திருத்தத்தை எரிக்கவில்லை

## பௌத்தத்தையே எரித்துள்ளார்கள்

பிக்குகள் அரசியல் யாப்பின் 13 ஆம் திருத்தத்தை எரிக்கவில்லை. அவர்கள் எரித்தது பௌத்தத்தையே என அரசியல் கைதிகளை விடுதலை செய்வதற்கான தேசிய அமைப்பின் இணைப்பாளர் அருட்தந்தை மா.சத்திவேல் தெரிவித்துள்ளார்.

அவரால் வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையிலே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவ் அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,



பிக்குகள் (08.02.2023) பேரணி நடாத்தி அரசியல் யாப்பின் 13 ஆம் திருத்தத்தை வீதியில் எரித்திருக்கின்றார்கள். அவர்கள் எரித்தது பௌத்தத்தையே. பிக்குகளின் அரசியலுக்கு பின்னால் உள்ள அரசியல் சக்தியே அதற்கு காரணமாகும்.

ராஜீவ் காந்தி - ஜே.ஆர் ஒப்பந்தத்தை 36 வருடங்களுக்கு முன்னரே தமிழர்கள் தமது அரசியல் தீர்வாக ஏற்றுக் கொள்ளவில்லை. 13 ம் திருத்தத்தோடு உருவான மாகாணசபையையும் ஆயுத யுத்தம் மௌனிக்கப்பட்ட பின்னரும் அதனை தீர்வாக முழுமையாக ஏற்றுக் கொள்வதற்கும் எவரும் ஆயத்தம் இல்லை. கொழும்பு அரசியல்வாதியான மனோகணேசன் மட்டுமே இது அரசியல் தீர்வுக்கான ஆரம்பப்புள்ளி என கூறிக்கொண்டிருக்கின்றார்.

இத்தகைய சூழ்நிலையில் ரணில் 13 என்று கூறுவதும், பிக்குகள் அதனை பேரணியாக வந்து எரிப்பதும் அரசியல் நாடகமே அன்றி வேறில்லை. சீன சார்பு குழுவினரின் ஆதரவோடும், இந்திய மற்றும் மேற்குலகு சார்பு ஆதரவோடுமே ரணில் விக்கிரமசிங்க பதவியில் இருக்கும் நிலையில் பூனைக்கு வாழும் எலிக்கு தலையை காட்டுகின்ற பாம்பின் செயற்பாடு இந்த 13 எரித்தல் அரசியலுக்குப் பின்னால் இருக்கின்றது.

இந்தியாவையும், தமிழர்களையும் சமாளிப்தற்கு13 என்றும், சீனாவை தம்வசம் வைத்திருக்க பிக்குகள் பேரணி ஒருங்கே கையாளப்படுகிறது. தமிழர்கள் ஏமாந்து விடக் கூடாது. ஆனால் சில தமிழ் அரசியல் வாதிகள் இதற்கு பின்னால் நிற்பது அரசியல் சுய இலாபம் கருதியே. இத்தகைய சூழலில் ரணில் ஜனாதிபதி தேர்தலை நோக்கி காய் நகர்த்துவதையும் உணரக்கூடியதாக உள்ளது.

இந் நிலையில் ஜனாதிபதி 'நான் நாட்டை பிரிக்க மாட்டேன். சமஸ்ட்டி இல்லை. ஒற்றை ஆட்சியின் கீழ் தீர்வு' எனக் கூறுவதை நாம் அவதானிக்கலாம். சிங்கள பௌத்த வாக்குகளின் சொந்தக்காரர்கள் பக்கமாக நின்று அரசியல் செய்யும் தலைமையின் கீழ் தமிழர்களுக்கு எதிர்காலம் இல்லை. இந்தப் பின்னணியில் சிங்கள பௌத்த வாக்குகளின் உரிமையாளர்கள் பேரணியை கொழும்பு நோக்கி நகர்த்தி உள்ளனர்.

தமிழர்கள் பௌத்தத்தை மதிக்கின்றார்கள். 'அனைத்து உயிர்களும் துக்கமற்று இருப்பதாக, அனைத்து உயிர்களும் நலமாய் இருப்பதாக, அனைத்து உயிர்களும் நோயற்று இருப்பதாக'' என்பதே பௌத்த கோட்பாடு. ஆனால் ஒரு சில பிக்குகளின் அரசியல் அதுவல்ல. பிக்குகளின் அரசியல் என்பது கொலையும் செய்யும் என்பதற்கு எஸ்.டபிள்யு.பண்டார நாயக்கவின் கொலை நல்ல உதாரணம். இதே போல் அது தீயோடும் விளையாடும் என்பதற்கு இறுதி உதாரணமே 13 தீயிட்டு கொளுத்தியமை. 75 ஆண்டு காலமாக தீர்வு சிங்கள பௌத்த அரசியலாலும் பிக்குகளின் அரசியலாலும் சுதந்திரம் சாம்பலாகி உள்ளது என்பது.

# ஹெரோயின் போதைப்பொருள் கடத்தல் குழு ட்ரோன் கருவி நவீன ஸ்கேனர் கருவிகளுடன் கைது-கல்முனை போலிஸார் அதிரடி

(பாறூக் ஷிஹான்)

ஹெரோயின் போதைப்பொருள் முகவராக செயற்பட்ட இளைஞன் உள்ளிட்ட குடும்ப பெண் ட்ரோன் கருவி நவீன ஸ்கேனர் கருவிகளுடன் கல்முனை தலைமையக பொலிஸார் கைது செய்துள்ளனர்.

அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் புலனாய்வு பிரிவு உத்தியோகத்தர் வை.டி செலரின்(40313) தகவலுக்கமைய செயற்பட்ட பொலிஸ் குழுவினர் திங்கட்கிழமை(13) அதிகாலை 33 வயது மதிக்கத்தக்க போதைப்பொருள் வியாபாரி வெள்ளையன் என அப்பகுதி மக்களினால் அழைக்கப்படுகின்ற முஹமட் ஹனீபா அர்சத் என்பவரை சாய்ந்தமருது பகுதியில் வைத்து கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்ட சந்தேக நபரிடம் இருந்து போதைப்பொருளை அளக்கின்ற இலத்திரனியல் தராசு மற்றும் 5 கிராம் 140 மில்லி கிராம் ஹெரோயின் போதைப்பொருள் உள்ளிட்டவைகள் மீட்கப்பட்டன. இச்சந்தேக நபர் கடந்த 13.01.2023 அன்று வீதியில் பயணம் செய்த பாடசாலை மாணவர் ஒருவரை வாகனம் ஒன்றினால் மோதி தலைமறைவாகி இருந்த நிலையில் பொலிஸாரினால் தேடப்பட்டு வந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது. மேலும் இச்சந்தேக நபர் அக்க



ரைப்பற்று நிந்தவூர் கல்முனை பெரிய நீலாவணை மருதமுனை சம்மாந்துறை பகுதிகளுக்கு போதைப் பொருட்களை விநியோகிக்கின்ற பிரதான வியாபாரி என பொலிஸார் குறிப்பிட்டனர்.

தொடர்ந்து கைதான சந்தேக நபரின் கல்முனை மற்றும் சாய்ந்தமருது பகுதியில் உள்ள வீடுகள் பொலிஸாரின் மோப்ப நாய்களின் உதவியுடன் சோதனைகள் இன்று மதியம் பொலிஸாரினால் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இச்சோதனை நடவடிக்கையானது கல்முனை உதவி பொலிஸ் அத்தியட்சகர் ரீ. எச். டி .எம். எல். புத்திக வழிநடத்தலில் கல்முனை தலைமையக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி எம். ரம்ஷீன் பக்கீர் ஆலோசனையில் கல்முனை பிராந்திய போதைப்பொருள் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ஏ.எல்.எம். ரவூப் தலைமையில் சென்ற பொலிஸ் சார்ஜன்ட்களான எம்.எம்.எம். அன்வர் (63037) பொலிஸ் கன்ஸ்டபிள்களான வை.நவராஜ் (8475) எம்.இஷாக்(76433) ராஜபக்ஸ ( 86765) எஸ்.தர்சீகன்(99058) ஆர்.ஹேமானந்த(99059) வாகனச் சாரதி ஏ.எச்.எம் ஹம்தான்(80994) குழுவினர் குறித்த சம்பவத்துடன் தொடர்புடைய 2 சந்தேக நபர்களான சகோதரன் சகோதரியை கைது செய்துள்ளனர். குறித்த சோதனை நடவடிக்கையின் போது கல்முனை பகுதி செயிலான் வீதியில் அமைந்துள்ள சந்தேக நபரின் சகோதரியின் வீடு மற்றும் சாய்ந்தமரது பகுதியில் உள்ள சந்தேக நபரின் வீடும் பொலிஸ் குழுக்களினால் சோதனைக்குள்ளாக்கப்பட்டது. இதன் போது ஒரு தொகுதி போதைப்பொருட்கள் 2 அதி நவீன ஸ்கேனர்கள் சிசிடிவி டிவீஆர் உபகரணம் பதிவு செய்யப்படாத ட்ரோன் பறக்கும் சாதனம் உள்ளிட்டவைகள் பொலிஸாரினால் மீட்கப்பட்டன.

குறித்த வீட்டில் இருந்த சந்தேக நபரின் சகோதரியான 40 வயது மதிக்கத்தக்க பெண் ஒருவரும் கல்முனை தலைமையக பொலிஸாரினால் கைது செய்யப்பட்டு விசாரணைக்காக அழைத்து செல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

ஊர் சுற்றி

# சினிமாவில் ஜாதி பார்க்கத் தான் செய்கிறார்கள்

## நடிகர் விஜய் விஷ்வா வருத்தம்!




இதுவரை ஒரு வளரும் நடிகராக இருந்து 20 படங்களுக்கு மேல் நடித்துள்ள அபி சரவணன் இப்போது விஜய் விஷ்வா என்று பெயர் மாற்றிக்கொண்டு புதிய நம்பிக்கையோடு புதிய பட வாய்ப்புகளில் நடித்து வருகிறார்.

அவரது பிறந்த நாளை ஒட்டி அவர் நடித்துள்ள 'பரபரப்பு' மற்றும் 'கும்பாரி' படங்களின் பர்ஸ்ட் லுக் போஸ்டர்களை இன்று நடிகர்கள் விஷால் , விஜய் சேதுபதி, நட்டி நடராஜ் ஆகியோர் வெளியிட்டுள்ளனர்.

திரையுலகில் தங்கள் உழைப்பால் தங்களுக்கான பாதையை அமைத்துக் கொண்ட விஷால், விஜய் சேதுபதி, நட்டி நடராஜ் போன்றவர்கள் , திரையுலகில் தனக்கான இடத்திற்காகப் போராடிக் கொண்டிருக்கும் விஜய் விஷ்வாவின் உழைப்பை அங்கீகரித்து ஃபர்ஸ்ட் லுக்கை மனமுவந்து வெளியிட்டு வாழ்த்தி உள்ளார்கள்.

இந்த மகிழ்ச்சியான தருணத்தில் தனது பிறந்த நாளை ஒட்டி விஜய் விஷ்வா பேசும்போது,

'நான் கடந்த டிசம்பர் 2021-ல் அபிசரவணன் ஆக இருந்தபோது ஏதோ என்னிடம் குறைவது போல் உணர்ந்தேன். நம்பிக்கையாக சொல்லிக் கொள்ளும்படியான பட வாய்ப்புகள் பற்றி என்னால் அப்போது பேச முடியவில்லை. 2022-ல் விஜய் விஷ்வாவாக மாறி இப்போது நான் நடித்து வெளியாகும் அளவிற்கு பரபரப்பு, கும்பாரி என இரண்டு நம்பிக்கை தரும் படங்கள் கையில் உள்ளன. இதில் பரபரப்பு விரைவில் பாடல்கள் வெளியீட்டு விழா நடைபெற உள்ளது. படம் மார்ச்சில் வெளியாகும் திட்டத்தில் உள்ளது. அது மட்டுமல்லாமல் வெப் சீரிஸ், புதிய படங்கள் என வரிசையாக வாய்ப்புகள் வந்துள்ளன.

அந்த வகையில் எனக்கு இந்தப் பெயர் மாற்றம் வாழ்க்கையிலும் ஒரு மாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது என்றே கூற வேண்டும். அபி சரவணன் என்ற பெயரில் எனக்கு எந்த வெறுப்புமில்லை. ஆனால் இசையமைப்பாளர் ஜிப்ரானின் தந்தை இப்படிப் பெயர் மாற்றினால் நன்றாக இருக்கும் என்று கூறிய ஆலோசனைப்படி இதை மாற்றி இருக்கிறேன். அதன் பின் மாற்றத்திற்கான , வளர்ச்சிக்கான அறிகுறிகள் எனக்குத் தென்பட ஆரம்பித்துள்ளன.

பரபரப்பு படத்தில் நான் முதன் முதலாக போலீஸ் கதா பாத்திரத்தில் நடித்திருக்கிறேன். இந்தப் படத்தில் பிரபலமான நடிகர்களும் நடித்துள்ளார்கள். லோகு, லால், கோபி இணைந்து தயாரித்து இருக்கிறார்கள். சி.எம். லோகு இயக்கியுள்ளார்.

அடுத்து கும்பாரி என்ற படம். அதில் நான் மீனவர் கதாபாத்திரத்தில் நடித்துள்ளேன். முழுக்க முழுக்க கன்னியாகுமரியில் கடலும் கடல் சார்ந்த பகுதி என்கிற பின்னணியில் எடுக்கப்பட்டுள்ள படம். இதில் ஒரு கிராமத்து இளைஞனாக நான் வருகிறேன். எனக்கு இது ஒரு சவாலான மற்றும் மாறுபட்ட அனுபவமாக இருந்தது.

குமாரதாஸ் இந்தப் படத்தைத் தயாரித்திருக்கிறார். புதிய வித்தியாசமான கதை என்று அவர் ஊக்கம் கொடுத்து இந்தப் படத்தை உருவாக்கி உள்ளார். இப்படத்தில் சாம்ஸ், பருத்தி வீரன் சரவணன், காதல் சுகுமார் , மதுமிதா என நடித்துள்ளார்கள். என் ஜோடியாக மகா நடித்துள்ளார். இந்தப் படம் தமிழ், மலையாள மொழிகளில் உருவாகியுள்ளது.

இன்னொரு பட வாய்ப்பு ஒரு பெரிய நிறுவனத்தில் நான் ஒரு முன்னணிக் கதாநாயகிக்கு ஜோடியாக இரண்டாவது கதாநாயகனாக நான் நடித்துள்ளேன். எனது காட்சிகளுக்கு சித்து ஸ்ரீராம் பின்னணி பாடியுள்ளார். அது மகிழ்ச்சியான அனுபவம், ஏனென்றால் அவர் மிகப்பெரிய நட்சத்திரங்களுக்காகப் பாடியவர். என்னுடன் நடித்த அந்தப் பிரபல ஜோடி யார் என்பது பிறகு வெளியில் சொல்வேன். இந்தப் படம் தமிழ், தெலுங்கில் தயாரிக்கப்பட்டுள்ளது. அபிஷேக் பிலிம்ஸ் தயாரித்துள்ளது.

அதன் பிறகு எனது அடுத்த மகிழ்ச்சியான செய்தியாக நான் சொல்ல விரும்புவது வெப் சீரீஸ் இரண்டில் நான் நடித்து வருகிறேன். அந்த வகையில் புதிய பெயர் புதிய வாழ்க்கை புதிய வாய்ப்புகள் என்று மாற்றத்தை நான் உணர்கிறேன். ஒரு முன்னேற்றத்திற்கான முதல் முதல் படி என்றுதான் இதைச் சொல்ல வேண்டும். இன்னும் பல படிகள் மேலேற வேண்டும். எனக்கு முன்பாக நூறு பேர் ஓடிக் கொண்டிருக்கிறார்கள். நானும் நூறாவதாக ஓடுகிறேன் என்பதில் எனக்குப் பெருமை. ஆனால் எனது முயற்சியால் உழைப்பால் பல படிகள் மேலேறுவேன் என்பது எனது நம்பிக்கை. நான் நடித்து பிரம்ம முகூர்த்தம் என்ற படம் வெளியாக இருக்கிறது. விஜய் இயக்கியிருக்கிறார். அது முழு இரவில் நடக்கும் கதை .வித்தியாசமான அனுபவம்.

அடுத்து வானவன் என்கிற படம், இன்னொரு வாய்ப்பு. மூன்று மணி நேரத்தில் ஒரு இரவில் நடக்கும் கதை இது. இதற்காக 40 நாட்கள் இரவு முழுவதும் படப்பிடிப்பில் கலந்து கொண்டேன். அப்போது வானவன் படத்திற்காக முழுக்க முழுக்க இரவில் நடித்துவிட்டு , பரபரப்பு படத்திற்காக பகலில் நடிக்கச் செல்வேன். இப்படி மூன்று நான்கு நாட்கள் தூக்கமில்லாமல் தொடர்ச்சியாக நான் நடித்திருக்கிறேன். தமிழ்நாட்டு மக்கள் எப்போதும் கடின உழைப்புக்கு மதிப்பு கொடுப்பவர்கள். எனது உழைப்பையும் எனது பங்களிப்பையும் பார்த்து விட்டு அவர்கள் எனக்கு ஆதரவு தருவார்கள் என்கிற என்கிற நம்பிக்கை எனக்குள்ளது. ஏனென்றால் அந்த அளவுக்கு நாங்கள் உழைத்திருக்கிறோம்.

கவிஞர் வைரமுத்து அவர்களின் வரிகளில் உருவான ஆல்பத்தில் நான் நடித்துள்ளேன். அதே போல் வித்யாசாகர், ரகுநந்தன், ஸ்ரீதர், ப்ரியா ஆகியோர் இசையமைப்பில் உருவான இசை ஆல்பங்களில் நான் நடித்திருக்கிறேன். இப்படித் திரைப் படம், ஓடிடி, மியூசிக் ஆல்பம் என்று அனைத்து தளங்களிலும் எனது பங்களிப்பைத் தொடர்ந்து கொண்டிருப்பது எனக்குத் திருப்தியாக இருக்கிறது' என்றார்.

இத்தனை ஆண்டு திரை உலகப் பழக்கத்தில் பெரிய இயக்குநர்கள் ஏன் உங்களுக்கு வாய்ப்பு கொடுப்பதில்லை ? என்று கேட்ட போது,

'என்னைக் கேட்டால் சாலிகிராமத்தில் வாய்ப்பு தேடிக் கொண்டிருக்கும் ஒவ்வொரு உதவி இயக்குநரும் பெரியஇயக்குநர்கள் தான். படம் இயக்கியவர்களையும் அப்படித்தான் சொல்வேன். அவர்களுக்கான நேரம் காலம் சரியாக அமையும் போது அவர்கள் பெரிய இயக்குநர்களாக வருகிறார்கள். எனவே நான் பெரிய சிறிய என்று பிரித்துப் பார்ப்பதில்லை.

வளர்ந்த இயக்குநர்கள் எனது வாய்ப்பு பற்றிக் கூறும் போது அனைவரும் சொல்லும் பதில் இது தான். நீங்கள் வளர்ந்து விட்டீர்கள் எல்லாருக்கும் முகம் தெரிந்த கதாநாயகன் ஆகிவிட்டீர்கள். எங்கள் படங்களில் அதற்கான வாய்ப்பு வரும்போது சொல்கிறோம். இதைத்தான் பதிலாகச் சொல்கிறார்கள்'என்கிறார்.

உங்களுக்குச் சரியான திருப்பு முனைப் படங்கள் அமையாத காரணம் என்ன? என்று கேட்டபோது.

'நான் என்னை வைத்து படங்கள் இயக்கிய இயக்குநரையோ தயாரிப்பாளரையோ குறை சொல்ல மாட்டேன் . அவர்கள் சொன்ன கதையில் அவர்கள் தயாரிப்புத் திட்டத்தில் நான் நம்பிக்கை வைத்து நடித்தேன். அவர்கள் தங்கள் கடமைகளைச் சரியாகத்தான் செய்தார்கள் என்று தான் சொல்வேன். இயக்குவதில் இயக்குநரும் செலவுகளைச் செய்வதில் தயாரிப்பாளரும் எந்தக் குறைகளையும் வைக்கவில்லை. அந்த வகையில் நான் நடித்து சமீப காலங்களில் கேரள நாட்டிளம் பெண்களுடனே, டூரிங் டாக்கீஸ் ,சாயம் என மூன்று படங்கள் வந்திருந்தாலும் அவை மக்களைச் சரியாக சென்றடையவில்லை என்று சொல்ல வேண்டும் .அதற்குத் திரை உலகில் காட்டப்படும் பெரிய படம், சிறிய படம் என்ற பாகுபாடு ஒரு காரணம் என்பேன். சிறிய படங்களுக்கு ஒதுக்கப்படும் திரையரங்குகளும் காட்சிகளுக்கான நேரமும் பெரிய பிரச்சினையாக உள்ளது.

பெரிய படமாக இருந்தாலும் சிறிய படமாக இருந்தாலும் எல்லாரும் ஒரே மாதிரி தான் உழைக்கிறார்கள். ஆனால் வெளியிடுவதில் பாகுபாடு காட்டுகிறார்கள். போஸ்டர் ஒட்டுவதில் கூட இந்தப் பாகுபாடு இருக்கிறது. அதிகாலை 2 மணிக்கு எனது போஸ்டர் ஒட்டினால் இரண்டு பத்துக்கு இன்னொரு படத்தின் போஸ்டரை அதன் மேலேயே ஒட்டுகிறார்கள். தயாரிப்பாளர் சங்கம் முன் வந்து இந்த விஷயத்தில் தலையிட்டு சரியான வரைமுறைகளை வகுக்க வேண்டும். அப்பொழுதுதான் இந்தப் பாகுபாடு மறையும் என்று நான் நினைக்கிறேன். சிறிய படங்கள் ஓடுவதற்கு ஒரு வார காலமாவது அவகாசம் தர வேண்டும்.

புதிய படங்களை ஆதரிக்க வேண்டும். ஒவ்வொரு சிறிய புதிய படத்திற்குப் பின்னாலும் இயக்குநர்கள் , நடிகர்கள் தொழில்நுட்பக் கலைஞர்கள் என்று நூறு குடும்பங்களுக்கான வாழ்வாதாரம் இருக்கிறது என்பதைக் கவனத்தில் கொண்டு சிறிய படங்கள் வெளிவருவதற்கு தயாரிப்பாளர் சங்கம் திட்டங்கள் வகுத்து திரையரங்குகள் கிடைக்க வழி செய்ய வேண்டும். அனைத்திற்கும் தாய் சங்கமாக இருக்கும் அவர்கள் இதைச் செய்ய வேண்டும்.' என்றார்.

சினிமாவில் சாதி பார்க்கப்படுகிறதா? என்று கேட்டபோது,

'சிலர் இப்படித் தங்கள் சாதியை உயர்த்திப் பிடிக்கிறார்கள். அப்படிப்பட்ட படங்கள் எடுக்கிறார்கள். எல்லாருமே இப்படிப் பார்க்கிறார்கள் என்று சொல்ல முடியாது. ஆனால் சினிமாவில் சாதி பார்க்கப்படுகிறது என்கிற உண்மையை ஒப்புக்கொள்ளவே வேண்டும்.' என்றார்.

இப்போதைய சூப்பர் ஸ்டார் யார் என்று விஜய் விஷ்வாவிடம் கேட்டபோது,

'இப்போது சூப்பர் ஸ்டாராக ரஜினி சார் தான் இருக்கிறார். அவருக்குப் பின் அதைப் பற்றி யோசிக்கலாம் .ஆனால் எப்போதும் தகுதியான ஒருவருக்குத்தான் அந்த மகுடம் போய்ச் சேரும் என்று நான் நினைக்கிறேன்'என்றார்.

அபி சரவணன் ஆக இருந்தபோது தொடர்ந்து வந்த சமூக சேவைகள் இப்போதும் தொடருமா என்ற போது,

'நான் இப்படி உதவிகள் எப்போதும் செய்து கொண்டு தான் இருக்கிறேன். ஆனால் அப்படி நான் செய்யும் சில உதவிகள் விளம்பரத்திற்காக என்று பேசப்படுவதால் நான் வெளியே சொல்லாமல் செய்து வருகிறேன். நடிப்பதே என் குறிக்கோள் அதை நோக்கியே என் பயணம் என்று இப்போது போய்க் கொண்டிருக்கிறது. அதே நேரம் என்னால் முடிந்த உதவிகளை வெளியே தெரியாமல் செய்து கொண்டுதான் இருப்பேன்' என்றார்.






